அரசாங்க நிர்வாக சுற்றிக்கை :18/2006

எனது இல.76/1/29/21/MCC/vi
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2006 ஒக்டோபர் 09 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களுக்கும்,

**இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு தர முயர்த்துவதற்காக ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தல்.**

விசேட தரத்திற்கு தரமுயர்த்தும் பொருட்டு இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் 19(அ) பந்தியின் கீழான ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிப்பதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் வேண்டிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை நிருவாக சேவையில் உள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்தல் தொடர்பாக தற்போது நடைமுறையில் இருக்கின்ற இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் பிரிவு 19(ஆ) வில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

19 (ஆ) செயலாளரின் ஆலோசனைப் படி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளருடன் ஏற்கனவே உடபட்டுக் கொண்டவாறு அரச நிர்வாகம், முகாமை, அரச கொள்கை, பொருளியல் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய பாடத்துறைகளுக்கு உரியதாக எழுத்திலான ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும். அதன் படி இ.அ.நி. நிறுவனத்தின் பணிப்பாளரால் நியமிக்கப்படுகின்ற ஒரு நடுவர் குழு முன்நிலையில் தொடர்புடைய அலுவலர் குறித்த ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்ற அலுவலர்கள் பின்வருமாறு செயற்பட வேண்டும்.

I. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரிடம் தாம் கற்க எதிர்பார்க்கிற பாடத்துறை பற்றிய ஆய்வுக் கட்டுரை பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். இவ் ஆய்வுக் கட்டுரை பிரேரணைக்குள் தாம் கற்க எதிர்பார்க்கின்ற பிரச்சினை பற்றி சிறியதொரு அறிமுகம், விடயங்களைப் பெறுதல், அத்துடன் பகுப்பாய்வுக்காக கையாளும் திறமுறை மற்றும் ஆய்வுக் கட்டுரையின் மாதிரி ஆகிய விபரங்களை உள்ளடக்க வேண்டும் நீங்கள் கற்பதற்காக தெரிவு செய்கிற பிரச்சினையானது உரிய துறையினுள் கொள்கை ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பிரச்சினை ஆதல் வேண்டும்.

II. நீங்கள் சமர்ப்பித்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டதென இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் அறிவித்ததன் பின், குறித்த கற்கை வேலைகளை முடிவுறுத்தி ஆய்வுக் கட்டுரையை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். தேவைபடுமாயின் இதனை கண்காணிப்பாளர் ஒருவரின் வழிகாட்டலின் கீழ் முடிவுறுத்தலாம்.

III. தங்களின் ஆய்வுக் கட்டுரை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் நியமிக்கப்படும் ஒரு நடுவர்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அது அவர்களின் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

டி. திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.